# கொழும்பில் வேலைநிறுத்தம்; அரசுக்கு நெருக்கடி

(கொழும்பு)

கொழும்பில தனியார் பஸ் நிறுவனத்தின் மேற்கொண்டு வரும் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு மீண்டும் இன்று தமது வழமையான சேவைகளில் ஈடுபாவிட்டால் அவர்களின் லைசென்சுகள் ரத்துச் செய்யப்படுமென அரசு எச்சரிக்கை செய்துள்ளது.

கடந்த மூன்று நாட்களாக

[4ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 04 இதழ் 128
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 18 - 06 - 1992

## ஜனாதிபதியின் நிலைப்பாடு அமைச்சரவைக்கு அறிவிப்பு

(கொழும்பு)

ஏழு தமிழ்க் கட்சிகளுடன் ஜனாதிபதி நடாத்திய பேச்சுக்களின்போது அவர்கள் சமர்ப்பித்த நான்கு அம்சத்திட்டம் குறித்து ஜனாதிபதியின் நிலைப்பாடு என்ன என்பது அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ரணில்

[4 ம் பக்கம் பார்க்க]

## மண்ணெண்ணை பதுக்கல் மக்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் மண்ணெண்ணை வியாபாரிகள் மண்ணெண்ணையை பதுக்கி, செயற்கைத் தட்டுப்பாட்டை நேற்று ஏற்படுத்தினர்கள்.

நேற்று நண்பகல் வரை யாழ். நகரெங்கும் காட்சியளித்த மண்ணெண்ணை திடீ

(4 ம் பக்கம் பார்க்க)

# ★ உள்நாட்டில் தொடரும் போரை முடிவிற்கு கொண்டுவர கால எல்லை நிர்ணயிக்கப்படும்!

## அமைச்சர் ரணில் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் கடந்த பல வருடங்களாக இடம்பெற்றுவரும் உள்நாட்டுப் போரை முடிவிற்கு கொண்டு வருவதற்கான கால எல்லை நிர்ணயிக்கப்படவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

இனப்பிரச்னைக்குத் தீர்வு காணும் முயற்சியில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் பல வருடங்களாக நீடித்துவரும் உள்நாட்டுப் போரை முடிவுக்குக்கொண்டு வர கால எல்லை நிர்ணயிக்கப்படவுள்ளது என்றார்.

இதேவேளை இந்த வருட இறுதிக்குள் இனப்பிரச்னைக்கு இணக்கமான தீர்வு எட்டப்படுமென திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

எனினும் இராணுவ நடவடிக்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. [சி]

## மட்டக்களப்பில் படைகள் குவிப்பு

(மட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சகல இராணுவ முகாம்களிலும், பெருமளவு இராணுவத்தினர் தற்போது குவிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

வாகரை பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களிலேயே மிகக்கூடுதலான இராணுவத்தினர் தினமும் குவிக்கப்படுவதாகவும் இப்பகுதிகளில் புலிகளின் தாக்குதல்கள் அடிக்கடி நிகழ்வதே இதற்குக் காரணமெனவும் கூறப்படுகிறது. (வி)

## ஒய்வூதியம் வழங்கப்படுகிறது

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெற்றவர்களுக்கு மானிப்பாய் நகரசபை மண்டபத்தில் இயங்கும் மேற்படி வங்கியில் ஒய்வூதியம் வழங்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கில் தொடர்ந்து இராணுவ நடவடிக்கை- கேர்ணல் கூறுகிறார்

[கொழும்பு]

வடக்கு-கிழக்குப் பகுதியில் தொடர்ந்து பல இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கேற்ப திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவ்வப்பகுதிகளுக்கு தேவையான படைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த இருவாரங்களில், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற போர் நடவடிக்கையில் கவசப்படைகளுடன் கடற்படையினர் தரைத்தாக்குதலில் ஈடுபட்டதாகவும் தொடர்ந்தும் அவர்கள் ஏனைய

[4-ம் பக்கம் பார்க்க]

## வயோதிபர் பலி

(மானிப்பாய்)

விசர்நாயினுல் கடியுண்டநபர் போதிய சிகிச்சை பெறுததினுல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணமானுர்.

நவாலியைச் சேர்ந்த நாகர் சின்னத்துரை (65 வயது) என்ற வயோதிபர் கடந்த

(4-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழுவின் முடிவிற்கு முன்னுரிமை வழங்க முடிவு

(கொழும்பு)

இனப்பிரச்னை தீர்வு குறித்து தெரிவுக்குழு சமர்ப்பிக்கும் திட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கவுள்ளதாக ஜனாதிபதி

[4-ம் பக்கம் பார்க்க]

## தெரிவுக்குழு நேற்று கூடியது

(கொழும்பு)

வடக்கு-கிழககு பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பது தொடர்பாக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் கூட்டம் நேற்று கொழும்பில் நடைபெற்றதாக அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; குறிப்பிட்ட காலத்துள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றை காணுமுகமாக தெரிவுக்குழுக்கூட்டம் கிரமமாக நடாத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி ஆளும் ஐ. தே. க. உறுப்பினர்களை பணித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க)

## தெல்லிப்பளையில் கண்ணிவெடி ஜீப்சிதறியது; 3 ராணுவம் பலி

(கொழும்பு)

தெல்லிப்பளை பகுதியில் நேற்றுமுன்தினம்இடம்பெற்ற கண்டிவெடித்தாக்குதலில் ஜீப் வண்டியொன்று சிக்கிச்சிதறியதில் மூன்று சிப்பாய்கள் கொல்லப்பட்டதுடன் மூவர் படுகாயமடைந்ததாக கேர்ணல் சரத் முனசிங்கா தெரிவித்தார்.

இப்பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றும் வேலையில் படையினர் ஈடுபட்டபோதே இச்சம்பவம் இடம்பெற்றதா

[4ம் பக்கம் பார்க்க]

## பிரபாவை ஒப்படைக்குமாறு இந்தியா கோரியுள்ளது. பிரட்மன் தகவல்

(கொழும்பு)

ராஜீவ் கொலை தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரனையும் பொட்டு அம்மானையும் ஒப்படைக்குமாறு இந்திய அரசு இலங்கையிடம் விடுத்த வேண்டுகோளை இலங்கை அரசு பரிசீலித்து வருவதாக ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த வாரம் இந்த வேண்டுகோளை இந்தியாவிடுத்திருந்தது. இது தொடர்பாக 3 குழுக்களை இலங்கைக்கு அனுப்பவும் இந்தியா அனுமதி கோரியுள்ளது.

இதில் இரு குழுக்களுக்கும்

(4-ம் பக்கம் பார்க்க)

## கோடிக்கரை சண்முகத்தின் மைத்துனர் கடத்தப்பட்டார்

(சென்னை)

முன்னுள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட கோடிக்கரை சண்முகத்தின் மைத்துனர் அவரது இல்லத்திலிருந்து கடத்தப்பட்டுள்ளார்.

தமிழகம் வேதாரணியம் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் காவலிலிருந்து தப்பிச்சென்று காட்டில் தற்கொலை செய்துகொண்டவர் எனக் கூறப்படும் சண்முகத்தின் மைத்துனர் வைத்தியநாதன் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இது பற்றி அவரது மனைவி பொலிசில் புகார் செய்துள்ளார். (சே)

## வரி விளம்பரம்

### பாலாஜி புத்தகசாலை

பிறந்ததின வாழ்த்து மடல் புத்தம் புதிய டிசைன்களில் உள்ளது. உங்கள் தேர்வுக்கு இன்றே முந்துங்கள்! 5% கழிவு வழங்கப்படும் 1ம் ஒழுங்கை, 27, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம். (ஏ 2223)

### வைத்தியம்

செங்கன்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், முத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணைவைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி6319)

### சலவைத்தூள்

மாணவ மணிகளே! உங்கள் சீருடைகளைத் துரிதமாகவும், பளிச்சிடும் வெண்மையாகவும், சலவை செய்ய ''மில்க்வைற்'' தூளைப் பாவியுங்கள். வெற்றுப் பக்கற்றுகளைச் சேகரித்து, சேர்ப்பித்து, அறிவு, நீதி நூல்கள், அப்பியாசப்புத்தகங்களை அன்பளிப்பாகப் பெறுங்கள் உள்ளூர் உற்பத்தியை ஆதரியுங்கள். ''மில்க்வைற்''. [ஏ-2232]

### விற்பனையாகின்றது

''என் கோபம் தணித்திடும் உன் சிரிப்பு, கோடி பெற்றிடும் புன் சிரிப்பு, தமிழ்த்தென்றல் - யாதுமூரான் கவிதைகள் விலை ரூ 20/- யாதுமூரானின் இலக்கண வினவிடை ரூபா 12-50. (சி-6426)

### ''சுவையகம்''

தென்மராட்சி மக்களுக்கு ஓர் நற்செய்தி! உங்களுக்குத் தேவையான உடனடி பேக்கரித் தயாரிப்புகள் சிற்றுண்டி வகைகள், இனிப்பு, ரொபி, சொக்கிளேற் வகைகள், குளிர்பானம் தயாரிப்பதற்கான எமல்சன் வகைகள், சிற்றிக் அசிற், கேக் தயாரிக்கும் பொருட்கள், பலரப்பட்ட குளிர்பானவகைகள் என்பனவற்றை சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள். ''சுவையகம்'', பிரதான வீதி, (யூனியன் பெற்றோல் நிலையத்திற்கு அருகாமை), சாவகச்சேரி. (ஏ-2214)

### பரீட்சை ஆண்டு 4, 5

சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் நடாத்தப்படும் ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 21-06-92 ஞாயிறும் ஆண்டு 4 பரீட்சை 28-6-92 ஞாயிறும் மு. ப. 11 நடைபெறும். பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6435)

## நிதியுதவி

(கொழும்பு)

வவுனியா பூந்தோட்ட வாசியான மணிவண்ணன் என்பவர் ஜனாதிபதி நிதியிலிருந்து ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறவுள்ளார்.

இவருக்கான காசோலை இன்று ஜனாதிபதி செயலகத்தில் வைத்து கையளிக்கப்படவுள்ளது.

வவுனியாவில் வைத்து இவர் ஜனாதிபதிக்கு தனது பரிதாப நிலைகுறித்து தெரிவித்ததனை அடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (கே)

## சேவை நலன் பாராட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

ராவற்குழி ம. வித்தியாலய அதிபராகக் கடமையாற்றி கொத்தணியதிபராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் திரு. செ. நா. சத்தியநாதனுக்கு மேற்படி வித்தியாலய மாணவர் சங்கம், வாணி மன்றம், ஆசிரியர் நலன் புரி சங்கம் ஆகியன இணைந்து சேவை நலன்பாராட்டுவிழா நடத்தியது.

அதிபர் க. மயில்வாகனம் தலைமையில்நடைபெற்ற இவ்விழாவில் செல்வி ச. சத்தியராணி வரவேற்புரை நிகழ்த்தினார். ஆசிரியர் சி. சதாசிவம் பாராட்டுப்பத்திரம் வாசித்தார்

திரு. சி. இரகுபதி, திரு. இ. பசுபதீஸ்வரன், திரு. சி. பவனக்குமாரன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

## விளையாட்டு போட்டி

[உடுவில்]

யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கு தெரிவாக உள்ள மருதனார்மட கல்விக் கோட்டத்தை சேர்ந்த பதினொரு கொத்தணிப் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

மருதனார்மடக் கல்விக் கோட்ட பிரதிக்கல்விப்பணிப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டிகளில் மானிப்பாய் கொத்தணி 183 புள்ளிகளைப்பெற்று முதன்மை வகித்தது. (109)

## தென்மராட்சி அபிவிருத்தித் திட்டங்கள்

[கொழும்புத்துறை]

தென்மராட்சிப்பகுதியில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதென்று யாழ் மாவட்ட சிக்கன கடன்வழங்கு சங்க சமாசம் முடிவுசெய்துள்ளதென்று தென்மராட்சியில் நடைபெற்ற சமாசத்தின் பத்தாவது ஆண்டு நிறைவுப்பொதுக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது, இக்கூட்டம் நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலய மண்டபத்தில் திரு. ச. பேரின்பநாதன் தலைமையில் நடைபெற்றது. (154)

## தேவை

குபேட்டா டீசல் லான்ட்மாஸ்டர் இன்ஜின் தேவை. விபரங்களுடன் அறியத் தரவும்.

விளம்பர இல: ஏ 2224, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். (ஏ 2224)

யாழ்ப்பாண மாநகரசபை

## டிராக்டர் கொள்வனவுக்கான கேள்வி அறிவித்தல்

பாவனையிலுள்ள பெட்டியுடன் கூடிய டிராக்டரைக் கொள்வனவு செய்வதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட விற்பனைவிலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படக்கூடிய பிணைப்பணமாக ரூபா 500/-ம் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணமாக ரூபா 50/ம் செலுத்தப்படுவதன் பேரில் 01-07-92 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00மணிவரை எம்மால்வழங்கப்படும்கேள்விப் படிவங்களிலேயே விற்பனை விலைகள் குறிப்பிடப்பட்டு 03-07-92ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00மணிக்கு முன்னர் மாநகரசபை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகச் சேர்க்கப்படுதல் வேண்டும். கேள்விகள் அதே தினம் பிற்பகல் 2-30மணிக்கு திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை மாநகரசபையின் மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
16-06-1992. [எ-2233]

## இசைமாலை நிகழ்ச்சி பிற்போடப்பட்டுள்ளது

செஞ்சோலைக் குழந்தைகளும், போராளிகளும் இணைந்து வழங்கும் இசைமாலை நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சி யூலை மாதம் நடைபெறும் என அறியத்தருகின்றோம். நிகழ்ச்சி நடைபெறும் நாட்கள் செய்தித் தாள்கள் மூலமும், புலிகளின் குரல் வானொலி மூலமும் விரைவில் அறியத்தரப்படும். திட்டமிட்டபடி நிகழ்ச்சியை நடத்த முடியாமைக்கு மனம் வருந்துகிறோம்.

செஞ்சோலை நிர்வாகிகள்

(சி-6422)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளை
தலைமையகம்

## தோல் பதனிடும் உத்தியோகத்தர்

எமது பணிமனையில் தோல் பதனிடும் உற்பத்தியை திறம்பட நடைமுறைப்படுத்தக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பட்டதாரி, தொழில்நுட்ப உத்தியோகத்தர் (N. D. T) அல்லது அதற்கு சமமான கல்வித்தராதரம், தகைமை, அனுபவம் ஆற்றல், ஆர்வம் உள்ளோரிடமிருந்தும், உள்ளூரிலேயே கடமை புரியக்கூடியவர்கள் விரும்பப்படுவர்.

விண்ணப்பங்கள் யாவும் 25-06-92க்கு முன் எமக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும். நேர்முகப் பரீட்சை 27-06-92 முற்பகல் 10-00 மணிக்கு நடைபெறும். தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

க. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
16-06 92. (எ-2230)

கூறுவிலை மூலம்

## நூல் விற்பனை

பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்தின் மின்தறி ஆலையில் பாவித்ததும், பாவிக்கப்படாததுமான நூல்கள் விற்பனைக்கு உள்ளன. இந்நூல்களை வாங்க விரும்புவோர் பொதுமுகாமையாளர் பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கத்திற்கு 25-06-92 வியாழக்கிழமை மாலை 5 00மணிக்கு முன்னர் கூறுவிலைமூலம் விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். இவ் நூல்களைப் பார்வையிட விரும்புவோர் சங்க அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்,
பண்டத்தரிப்பு. (சி-22 9)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ் கிளை
தலைமையகம்

## தோல் பதனிடும் தொழிலாளர்

மேற்படி எமது பணிமனையில் தோல் பதனிடும் பயிற்சி நெறி இலவசமாக நடாத்தப்படவுள்ளது.

பயிற்சிநெறி பயில விரும்பும் ஆற்றலும் அனுபவமும் தகுதியும் உள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 23-06-92க்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும். நேர்முகப்பரீட்சை 24-06-92 காலை 10-00 மணிக்கு நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

க. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
16-06-92. (எ-2231)

## இராசி பலன்

18-06-1992
வியாழக்கிழமை
(தமிழுக்கு ஆனி 04)

திருதியை பி. ப. 3-00வரை, உத்தராடம் பி. ப. 3-51 வரை: இராகு காலம் பகல் 1-24 முதல் 2-54 வரை: சுப நேரம் காலை 7-24 முதல் 8-54 வரை:

மேடம்: காரிய சித்தி, பெரியோர் மரியாதை, பணவரவு.

இடபம்: நிர்ப்பந்தம், சத்துரு பகை, மானபங்கம்.

மிதுனம்: விதண்டாவாதம் பயனற்ற செயல், முழங்கால் வலி.

கடகம்: தாய்ப்பாசம், கடின உழைப்பு, முயற்சி பலிதம்.

சிங்கம்: மனமகிழ்ச்சி, புதிய முதலீடு, புதிய தகவல்.

கன்னி; தாழ்ந்த நிலை, மனக்கவலை, அஜீரணக் குறைவு.

துலாம்: தூக்கக் குறைவு, புத்தித் தடுமாற்றம், பண முடை.

விருச்சிகம்; தொழில் மாற்றம், பெண் உதவி, காரிய சித்தி.

தனுசு: மனச் சங்கடம், கெட்ட கனவு, பதற்றம்.

மகரம்: சகோதர உதவி, பயணம் கைவிடல், தெய்வ பக்தி.

கும்பம்; வீண் பகை, தொழில் பாதிப்பு, மனக் குறை.

மீனம்; அன்னியர் உதவி, குடும்ப நன்மை, தியாகம்.

—ஜோஸ்யர்.

## YOGI'S CAKE AND SUGAR CRAFT EXHIBITION

மேற்படி கேக் கண்காட்சி
18-06-1992 வியாழக்கிழமை காலை 7-15மணிக்கு
யாழ். அரச அதிபர்
திரு. கே. மாணிக்கவாசகர் அவர்களால்
ஆரம்பித்துவைக்கப்படும்.

18-06-1992 தொடக்கம் 22-06-1992 வரை
காலை 9-00மணி தொடக்கம் மாலை 6-00மணி வரை
தினமும் கண்காட்சி நடைபெறும்.

நடைபெறும் இடம்:

**யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமி**

71B, நாயன்மார் வீதி,
கச்சேரி - நல்லூர் றேட்,
நல்லூர், யாழ்ப்பாணம். [சி-6431]

★ இந்திய வேலை நிறுத்தம்:

# தமிழக அரசுக்குக் கிடைத்த எதிர்பாராத 'போனஸ் பரிசு'

இந்திய உபகண்டத்தில் திடீரென வெடித்த ஒரு நாள் பொதுவேலை நிறுத்தம் இந்திய அரசை ஒரு உலுக்கு உலுப்பிய தென்றுதான் கூறவேண்டும். இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்துஇந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது.

அரசு இதற்கு எத்தனை நொண்டிச்சமாதானம் கூறினாலும் இதுதான் உண்மை,

இந்திய எதிர்கட்சியினருக்கு இந்த வேலை நிறுதம் ஒரு தித்திக்கும் தேன்பாகு என்றே கூறவேண்டும்.

தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரையில் இந்த வேலை நிறுத்தத்தை தனக்கு நல்ல முறையில் சாதகமாகவே பயன்படுத்திக் கொண்டது. இது ஜெயலலிதா தலைமையிலான அரசுக்குக் கிடைத்த எதிர்பாராத 'போனஸ் பரிசு' என்று குறிப்பிட்டால் கூட மிகையாது.

ஒரே கல்லில் இரண்டு கனிகளை வீழ்த்துவது போல் காரியங்களை தாராளமாகவே செய்திருக்கிறது தமிழக அரசு.

ஒருபுறம் இந்திய அரசுக்கு தன்னை விசுவாசமானவர்கள் என்று காட்டிக்கொண்டது. மற்றையது தனது அரசியல் எதிரிகளை மேலும் பழிவாங்கிக்கொண்டது இந்த இரண்டு கைங்காரியங்களையும் தமிழக அரசு தாராளமாகவே செய்தது. இப்படி ஒரு போனஸ் தமிழகஅரசுக்கு தவமிருந்தாலும் கிடைக்குமா?

வேலை நிறுத்தத்தை தூண்டிவிட்டனர் அல்லது ஆதரவாகஇருந்தனர் அல்லது அதில் நேரடியாகப் பங்கு பற்றினர் என்று கூறிக்கொண்டு சுமார் 11 ஆயிரம் பேரை தமிழக அரசு கைது செய்தது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று அழகான ஒரு வார்த்தை ஜாலத்தையும் அரசு சூட்டிவிட்டது. என்னே திறமை...?

இந்திய பொருளாதாரத்தில் ஒரு பேரிடி வீழ்ந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில். பங்கு மாற்றம் என்ற பெயரில் வங்கித்துறையில் ஏற்பட்ட மிகப்பெரிய மோசடியின்விளைவாக ஏற்பட்ட பொருளாதார சரிவை இந்த வேலை நிறுத்தம் மேலும் பாதித்து விட்டதென்றால் அது மிகையாகாது.

வீனஸ்

இந்திய நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் இந்திய பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட பேரிடியிலிருந்து தட்டுத்தடுமாறி எழுவதற்கு முன்னரே இந்தவேலை நிறுத்தம் என்ற இரண்டாவது பேரிடி அவர் தலையில் விழுந்திருக்கிறது.

இந்திய பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட மிகப்பெரிய தாக்கத்தை டாக்டர் மன்மோகன்சிங் மனம் திறந்து இந்த சந்தர்ப்பத்தில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

இந்திய பொருளாதாரதில் நெருக்கடி ஏற்பட்டிருக்கும் வேளை இது. எனவே பொது வேலை நிறுத்தம் செய்து அந்த நிலைமையை இன்னும் மோசமாக்கிவிடாதீர்கள். அதற்கு இதுவல்ல நேரம். எனவே வேலை நிறுத்தத்தைக் கைவிடுங்கள் என்று மன்மோகன்சிங் காலில் விழாத குறையாகக் கெஞ்சினார். ஆனால் வேலை நிறுத்தக்காரர்கள் வளைந்து கொடுத்தார்களா? இல்லவே இல்லை அவர்கள் இன்னும் நிமிர்ந்து நின்றார்கள்.

பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான, இந்திரா காங்கிரஸ் கட்சி பதவிக்கு வந்த பின் நடைபெற்ற இந்த முதல் வேலை நிறுத்தம் இந்திய அரசுக்கும் இந்தியத் தொழில் வர்க்கத்தினருக்கும் ஒரு சோதனை முயற்சி என்றுதான் கூறவேண்டும்.

தன்னையாருமே எதிர்க்க முடியாதென்று ஒரு இறுமாப்புப் போர்வையில் சஞ்சரித்துக் கொண்டிருந்த இந்திய அரசுக்கு இந்தியத் தொழிலாளர்கள் சரியான ஒரு பாடம் புகட்டிவிட்டனர். இப்போது இந்திய அரசு எதிரணி அரசியல் கட்சிகளை விட தொழிலாளர் வர்க்கத்தினரைக் கண்டு அஞ்சவேண்டிய விசித்திர நிலைஏற்பட்டுள்ளது.

இந்த முதல்வேலை நிறுத்தம் வெற்றியளித்திருப்பதால் அது எதிர்காலத்தில் பலவடிவங்களாக உருமாறி பிறவி எடுக்கவே செய்யும். அதற்கு ஏற்றவிதமாக இந்திய அரசும் வளைந்து நெளிந்து போக வேண்டிய நிலை ஏற்படும்.

## இடம்பெயர்ந்தோர் வீட்டில் திருட்டு

(பண்டத்தரிப்பு)

சித்திரைமேழியில் இடம் பெயர்ந்த ஆசிரியை ஒருவரின் வீட்டுக் கதவு கோடரியால் தகர்க்கப்பட்டு வீட்டில் வைக்கப்பட்டிருந்த 'கசெட்' வானொலிப் பெட்டி, மணிக்கூடு உட்பட பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன,

சித்திரைமேழிக் கிராமத்தில் பெருந்தொகையான மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (72)

# 'ராமதாஸ் கைது பழிவாங்கும் செயல்

[சென்னை]

விவசாயிகளின் வேதனையை வெளிப்படுத்திய பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாசையும் அவர்களது தொண்டர்களையும் உடனே விடுதலை செய்ய வேண்டும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஆர். நல்லக்கண்ணு இவ்வாறு தமிழக அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் நல்லசிவம் விடுத்த அறிக்கையில் பாட்டாளி மக்கள் கட்சியினர் கைது செய்யப்பட்டது பழிவாங்கும்போக்கில் இருப்பதாகவும் உடனே அவர்களை விடுதலை செய்யுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். [கே]

மருந்து தொழிற்சாலை மூலம்

# சுதேச மருந்து தட்டுப்பாடு நீங்கும்

(கிளிநொச்சி)

சித்த ஆயுர்வேத மருந்துத் தொழிற்சாலை மூலம் வடக்கின் சுதேச மருந்து தட்டுப்பாடு நீங்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

இவ்வாறு கரைச்சிப் பிரதேச சபையால் வட்டக்கச்சியில் நிர்மாணிக்கப்பட்ட சித்த ஆயுர்வேத மருந்துத் தயாரிப்பக திறப்பு விழாவைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்புரையாற்றுகையில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கூறினார்.

கரைச்சிப் பிரதேச சபையின் விசேட ஆணையாளரும் கிளிநொச்சி உதவி அரச அதிபருமான செல்வி என்.இந்துமதி வைபவத்திற்கு தலைமை தாங்கினார்.

அரசாங்க அதிபர் பொன்னம்பலம் மேலும் பேசுகையில்; சுதேச மருத்துவம் பழமையும் புதுமையும் மிக்க மருத்துவமாகும். இம்மருத்துவ அபிவிருத்திக்காக எடுக்கப்படும் சகல முயற்சிகளுக்கும் என் ஆதரவு என்றும் உண்டு. பொதுமக்கள் இம் மருத்துவத்தை பின்பற்ற தயக்கம் காட்டக்கூடாது என்றார்.

மேலதிக அரச அதிபர் எஸ். அமிர்தலிங்கம், கெயர் ஸ்தாபன பிரதிநிதி திரு. பத்திநாதர், சமூகசேவை உதவி பணிப்பாளர் திரு. இராசரெத்தினம், டாக்டர் க. திருலோகமூர்த்தி உட்பட பலர் உரையாற்றினார்கள். [83]

# நிலைமை சீரான பின்பே காங்கேசன் துறைமுக அபிவிருத்தி

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு நிலைமை சீரான பின்னரே காங்கேசன் துறைத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும் என துறைமுகங்கள் ராஜாங்க அமைச்சர் ஜனப் எம். ஈ. மஃறூப் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நெற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இரண்டரை மாதங்களுக்கு முன் அங்கு தான் விஜயம் செய்ததாகவும் காங்கேசன் துறைத் துறைமுகம் அபிவிருத்தி செய்யவேண்டிய அவசியத்தை உணர்ந்ததாகவும் அவர் மேலும் கூறினார். (கே)

## நூலகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் பாடசாலை நேரத்தில் விமானக்குண்டு வீச்சிற்குள்ளாகி மரணத்தை தழுவிய இந்துமகாவித்தியாலய மாணவன் சத்தியமூர்த்தியின் நினைவாக பிரஸ்தாப கல்லூரி உயர்வகுப்பு மாணவர்மன்றம் நூலகம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளது. இம்மாணவன் நினைவாக நினைவு தின விழாவும் அனுஷ்டிக்கப்பட்டது. (83)

## வாந்திபேதி

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வாந்திபேதி நோய் பரவிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

வயிற்றுப்போக்கு காரணமாக இதுவரை கொழும்பு வைத்தியசாலையில் 150 குழந்தைகளும் சிறார்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதிகளில் இந்நோய் பற்றிய அபாய அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது. (கே)

★ கொள்ளையின் எதிரொலி

# கோட்டை ரயில் நிலையத்தில் சாதாரண உடையில் பொலிஸார்

(கொழும்பு)

கோட்டை ரயில் நிலையத்தில் சாதாரண உடையணிந்த பொலிசார் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

கடந்த 6ம் திகதி கோட்டை ரயில் நிலையத்தில் சி.ஐ.டி. யினர் எனக்கூறி பிரயாணி ஒருவரிடம் 90 ஆயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டதை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தினமும் மாலை 6 மணி முதல் இரவு 11-30 மணி வரை சாதாரண உடை அணிந்த பொலிசார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சி.ஐ.டி.யினர் என யாரும் வந்தால் அது பற்றி கோட்டை ரயில் நிலைய அதிபரின் கவனத்திற்கு கொண்டுவருமாறு கோட்டை பொலிஸ் நிலைய அதிபர் கூறியுள்ளார். (கே)

## 64 பேருக்கு நியமனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 64 அமய எழுதுவினைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு உடனடியாக மாவட்டத்திலுள்ள திணைக்களங்கள் அரச அலுவலகங்களிற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் கூடுதலானோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (83)

# இராணுவ உடையில் கொள்ளையர் அட்டகாசம்

[மாத்தளை]

மாத்தளை மாவட்டத்தில் இராணுவ உடையில் வந்து கொள்ளையடிக்கும் சம்பவங்கள் மீண்டும் தலைதூக்கியுள்ளன.

இராணுவ உடையணிந்து வரும் கொள்ளையர்கள் வீட்டைச் சோதனையிடுவதாகக் கூறி அங்குள்ள பொருட்களை சூறையாடிச்செல்வதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிக்கடி மலையகத்தில் அமைதியைக் குலைக்கும் வகையில் இடம்பெறும் இத்தகைய சம்பவங்கள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்குமாறு பொலிசாரும், தொழிற்சங்கங்களும் வேண்டுகோள் விடுத்துள்ளன. [கே]

# கிராமிய வங்கியில் பணம் பற்றுக்குறை

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு மே மாதத்திற்கான ஒய்வூதியத்தைப் பணமாக வழங்குவதற்கு வங்கியில் பணம் பற்றுக்குறையாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உணவு முத்திரை, மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரை ஆகியவற்றை சங்கம் வழங்கி வருவதால் சங்கத்தில் பணப்புழக்கம் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. [72]

# விஞ்ஞான பேச்சுப் போட்டி நடாத்த முடிவு

(உடுவில்)

கருத்தரங்குகள், கண்காட்சிகள், கல்லூரிகளுக்கிடையிலான விஞ்ஞான பேச்சுப் போட்டிகள் ஆகியவற்றை நடத்துவதென யாழ்ப்பாணம் விஞ்ஞானிகள் சங்க வருடாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சகல பாடசாலைகளும் விஞ்ஞான சம்பந்தமான உதவிகளை இச்சங்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம் எனவும், யாழ்ப்பாணத்திலுள்ள சகல விஞ்ஞானிகளும் இச்சங்கத்தில் சேர்ந்து சேவை செய்ய முன்வரவேண்டுமெனவும் கல்லூரிகள், நிறுவனங்கள் போன்றன விஞ்ஞான சம்பந்தமான விடயங்கள் தொடர்பாக இச்சங்கத்துடன் தொடர்பு கொள்ளலாமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளன. (109)

## இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் வீரமனை அருள் மிகு கன்னிமாக்கௌரி அம்மன் ஆலயத்தில் ஏகதின இலட்சார்ச்சனை கடந்த 14-ந் திகதி நடைபெற்றது. (க)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரம் கிராமமுன்னேற்றச்சங்க 34-ம் ஆண்டு வருடாந்தப் பொதுக் கூட்டம் உதவி அரசாங்க அதிபர் செல்வி என். இந்துமதி தலைமையில் இடம்பெற்றது. [83]

# ★ இம் மண்ணை விட்டுச் சென்று தொலைந்துபோன சந்ததியாக

# எம்மவர்கள் வாழ்கிறார்கள்

## — நூல் வெளியீட்டில் யோகி —

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நாம் அளப்பெரியசாதனைகளும், பொருளாதார தடைக்கு எதிராகப் போராடும் இந்த நேரத்தில் சிலருக்கு நம்பிக்கை மனதில் படிய வில்லை. நம்பிக்கையீனமாகத்தான் இருக்கிறார்கள்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ''எமது உணவுத் தேவையும் உற்பத்தி இலக்குகளும்'' என்ற நூல் வெளியீட்டு விழாவில் திரு யோகரத்தினம் யோகி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் பொதுவாக எங்கள் மண்ணில் வளங்கள் இல்லை. வாழ்க்கை இல்லை எங்கேயோ வாழ்க்கை இருக்கிறது என்று ஓடித்திரிகிறார்கள்.

எண்ணாயிரம், பத்தாயிரம் மைல்களுக்கு அப்பால் தொலைந்துபோன சந்ததியாக வாழ்கின்றார்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மணலாறு ஆகிய இடங்களில் உள்ள வளங்களை நாங்கள் பயன்படுத்தாமல் இருக்கிறோம். இதனால் நிலப் பகுதி பறிபோகின்றது.

மணலாற்றில் மீன்வளம் உண்டு மீனைப்பிடித்துதொழில் புரிவது இழுக்கு என நம்மவர் எண்ணுகிறார்கள். எங்கேயோ உள்ளவன் இங்கு மீன் பிடிக்கிறான். ஆனால்நாங்கள்நாயாற்று ஏரியில் இறால் பிடித்து முன் மாதிரியாக நடந்து காட்டினோம்.

ஒரு வருடத்தில் சீனிக்காக 874 மில்லியன் ரூபாவையும், கோதுமைக்காக 576 மில்லியன் ரூபாவையும் நாம் ஸ்ரீலங்காவுக்கு கொடுக்கிறோம். இதற்கிடான பனஞ்சீனி மற்றும் சிறுதானிய வகைகள் எம்மிடம் உண்டு.

தமிழீழ வளம் குறித்து பல்கலைக்கழக புத்திஜீவிகள், கல்விமான்கள் தமது ஆக்கபூர்வமான பங்களிப்பை இதுவரை முழுமையாகச்செய்யவில்லை.

விடுதலைப் போராட்டத்தில் இவைகளை நாங்கள் தான் செய்யவேண்டியிருக்கிறது.

கூட்டத்தில் நூலின் முதற்பிரதியை தமிழீழ ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் ரவி வழங்க திரு. இளங்குமரன் பெற்றுக்கொண்டார். பல்கலைக்கழக விரிவுரையாளர் கந்தையா, கமத்தொழில் திணைக்கள முன்னாள் ஆணையாளர் ஜெயரட்னம் ஆகியோர் நூல்பற்றி ஆய்வுரை செய்தார்கள். (சு)

ஆயுதக் கடத்தல்

# விசாரணை நடத்துக

## தினேஷ் கோரிக்கை

(கொழும்பு)

புலிகளுக்கு ஆயுதம் வெடி மருந்துகள் வழங்கும் கப்பல் நிறுவனங்கள், ஏஜன்டுகள், புலி முக்கிஸ்தர்களுக்கு பணபலத்தால் மாலுமி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக எம்.ஈ பி தலைவர் தினேஸ் குணவர்த்தன கூறியுள்ளார்.

இதுபற்றி முழு விசாரணை நடத்தப்படவேண்டும் என்று அவர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது அரசைக்கேட்டுக்கொண்டுள்ளார். (கே)

# உரங்களை அனுப்புமாறு

## அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான உர வகைகளை காலதாமதமின்றி அனுப்பி வைக்கும்படி இலங்கை உரக்கூட்டுத்தாபனத்திடம் யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி கூட்டுத்தாபனம் 600 மெ தொன் உரத்தையே இங்கு அனுப்புவதாகவும், யாழ். மாவட்ட விவசாயத்துக்கு சராசரி 2 ஆயிரம் மெ, தொன் உரம் தற்போது தேவைப்படுவதாகவும், யாழ். அரச அதிபர் தெரிவித்தார். (வி)

## மரண அறிவித்தல்

### திருமதி

### றெபேக்கா மதுரமணி லோறன்ஸ்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்),

திருமதி றெபேக்கா மதுரமணி லோறன்ஸ் காலமானார். இவர் திரு கிளெமென்ட் லோறன்ஸ் சேனாதிராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியர் புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்), அவர்களின் அன்பு மனைவியும் செல்வி புஸ்பதேவி லோறன்ஸ், [ஆசிரியை சுண்டிக்குளி மகளிர்கல்லூரி யாழ்ப்பாணம்], Dr. ஆனந்தராஜா அவர்களின் அன்புத்தாயாரும், ஆனந்தராஜா தேவிகராணியின் அன்பு மாமியாரும், திலகராணி [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி, சேனாதிராஜன் [பரியோவான் கல்லூரி மாணவன்), அவர்களின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் 18-ம் திகதி இன்று வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்கு பரிசுத்த மரியாள் சேமக்காலையில் நடைபெறும்.

41, ஈச்சமோட்டைவீதி,<br>சுண்டிக்குளி,<br>யாழ்ப்பாணம்.

தகவல்:<br>Dr. ஆனந்தராஜா<br>லோறன்ஸ்<br>(மகன்)

(சி 6433)

## Called to Rest with Jesus

### REBECCA MATHURAMANI LAWRENCE

The death is announced of Rebecca Mathuramani Lawrence (Retired Teacher, St. Patrick's College Jaffna) Beloved wife of Clement Lawrence Senathirajah Retired Teacher St. Patrick's College). Loving mother of Pushpadevi (Staff, Chundikuli Girl's College), Dr. Anandarajah (Central Dispensary & Surgery Eachchamoddai). Mother-in-Law of Devikarani, Grandmother of Thilakaranie (Chundikuli Girls College), Senathirajan (St. John's College.) Cortege leaves residence at 3-00 p m. on 18th June Thursday to St. Marry's Burial grounds.

Dr. Anandarajah Lawrence<br>(Son)

4th Eachchamoddai,<br>Chundikuli, Jaffna.

(C 6432)

## அதிபர்கள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்குரிய பாடங்கள் போதிக்கும் பாடசாலை அதிபர்கள் இன்று காலை 10 மணிக்கு, யாழ். கல்விக் கோட்டத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் சமுகமளிக்குமாறு கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (சு)

### தெல்லிப்பளையில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வலிகாமம் வடக்கில் இடம்பெற்ற ஒப்ரேஷன் சண்டமாருதம் இராணுவ நடவடிக்கை கடந்த வியாழக்கிழமையுடன் முடிவடைந்து விட்டதாகவும் சரத் முனசிங்கா தெரிவித்தார்.

### பிரபாவை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கை ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது. மேலும் பிரபா, பொட்டு அம்மானை ஒப்படைப்பது பற்றி பேச 3-வது குழுவையும் அனுமதிக்கவேண்டுமென இந்தியா கோரியுள்ளது. இக்கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் கூறினர். (சி)

### கொழும்பில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நடைபெற்றுவரும் மேற்படி வேலைநிறுத்தம் தற்போது வெளியிடங்களுக்கும் பரவி வருவதால் அரசுக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அரசின் வேண்டுகோளுக்கு இணங்கி தனியார் பஸ் நிறுவனத்தினர் தமது வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொள்ளாவிட்டால் 1950ம் ஆண்டு முதல் தனியார் பஸ்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் ரத்துச்செய்யப்பட்டு மேற்படி பஸ்கள் ஓடிய பாதைகளுக்கு மீண்டும் அரச பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுமென்று அரசு எச்சரிக்கை செய்துள்ளது.

தனியார் பஸ்காரர்களுக்கு எதிராக அரசு மேற்கொண்ட சிலநடவடிக்கைகளையடுத்தே இந்த வேலை நிறுத்தம் ஆரம்பமானது. (வி)

### வடக்கு கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவார்களெனவும் தெரிவித்தார். [சி]

### தெரிவுக்குழுவின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

தெரிவுக்குழு என்ன திட்டத்தை வெளியிட்டாலும் அதனை சகல கட்சிகளும் ஏற்றுக்கொண்டு இனப்பிரச்னைத் தீர்வுக்கு உதவவேண்டுமென்றும் அவர் அனைத்துக்கட்சிகளையும் கேட்டுள்ளார். (சி)

### மண்ணெண்ணை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றென மறைக்கப்பட்டதனால் பிற்பகலில் பொதுமக்கள் மண்ணெண்ணையைத் தேடி வீதி வீதியாக அலைந்து திரிந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

யாழ். நகரில் ஊரடங்குச் சட்டம் என்ற பொய் வதந்தியைப் பரப்பிவிட்டு மண்ணெண்ணையை கூடிய விலையில் மறைமுகமாக விற்பனைசெய்ததையும் காணக்கூடியதாக இருந்தது. (வி)

### வயோதிபர் பலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறு மாதங்களுக்கு முன்னர் விசர்நாயினால் கடிபட்டு அதற்கான போதிய சிகிச்சை பெற்றுக்கொள்ளாததினால் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு கடந்த 15ம் திகதி மரணமானார். [71]

### ஜனாதிபதியின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பை எதிர்த்துள்ள ஜனாதிபதி 1987 இலங்கை-இந்திய ஒப்பந்தப்படி வடக்கு கிழக்கு தற்காலிக இணைப்பும் பின் சர்வஜன வாக்கெடுப்பும்நடத்தப்படுமெனவும் அங்கு தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

### ஓய்வூதியம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மேற்படி ஓய்வூதியம் இம்முறை முழுவதும் பணமாக வழங்கப்படுமென்றும், இடம் பெயர்ந்துள்ள ஓய்வூதியம் பெறுவோர் காலதாமதமின்றி அதனை பெற்றுக்கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது. (86)

கனடாவில்

# தமிழ் கடையில் கொள்ளை; இல. தமிழர் கடத்தப்பட்டார்

(ஒட்டாவா)

கனடாவில் தமிழர்களால் நடத்தப்படும் வீடியோ கடை ஒன்று கொள்ளையிடப்பட்டதோடு ஒரு இளைஞரும் கடத்தப்பட்டுள்ளார்.

இரண்டு பங்குதாரர்களால், கனடா - ரொரன்ரோவில் நடாத்தப்படும் இந்த வீடியோ கடையை உடைத்துகொள்ளை அடித்தவர்கள் இலங்கையைச் சேர்ந்த கோஷ்டியினரே என பொலிசார் கூறியுள்ளனர்.

மூன்று கார்களில் இரவு நேரம் வந்த சுமார் 10 பேர் அடங்கிய கோஷ்டி, கடையன்னலகளை அடித்துநொருக்கி பணத்தையும் கொள்ளையிட்டு சென்றுள்ளதுடன் இளைஞர் ஒருவரையும் கடத்திச் சென்றுள்ளது.

இவர்களை தேடி பொலிசார் வலைவிரித்துள்ளனர். (டீ)

## புதிய ஆளுநர்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநராக எச். வி. திசநாயக்கா ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜூலை 1ம் திகதி ஆளுநராக பதவியேற்கவிருக்கும் இவர் அரச அதிபராகவும், சுங்கப் பகுதியின் பிரதம அதிகாரியாகவும், ஆசிய அபிவிருத்திவங்கியின் பணிப்பாளராகவும், திறைசேரியின் செயலாளராகவும் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

நேற்று நண்பகலுக்குப்பின் யாழ். பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியலாளர் சகாதேவனின் அகாலமரணத்தை யொட்டி அஞ்சலி செலுத்துமுகமாக மூடப்பட்டிருந்தது

சகாதேவன் தெல்லிப்பழையில் தமது வீட்டுக்குச்சென்றபோது இலங்கை இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது தெரிந்ததே. (சு)

ஆலயம் மீது குண்டுவீச்சு

# அமைச்சர் தேவராஜ் ஜனாதிபதிக்கு புகார்

(கொழும்பு)

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திலும் அதன் சுற்றுடலிலும் விமானப்படையினர் குண்டுவீசித் தாக்கிய சம்பவம் தொடர்பாக இந்து சமய கலாச்சார ராஜாங்க அமைச்சர் திரு. தேவராஜ் ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளார்.

துர்க்கை அம்மன் ஆலயம், அங்குள்ள திக்கற்ற சிறுவர்கள் இல்லம், அகதி முகாம்என்பன தாக்குதலில் சேதமாக்கியது குறித்து யாழ்ப்பாண சமய மன்றங்கள் ஸ்தாபனங்கள் பல, அமைச்சருக்கு தமது கண்டனக் கடிதங்களை அனுப்பி வைத்திருந்தன.

இதனையடுத்தே இதுகுறித்து அமைச்சர் தேவராஜ் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். [கே]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூன் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News paper at the Genera Post office Srt Lanka under Licence Nnmber B/10336/36